தனித்தமிழ்
சிறுவர்
இதழ்

தமிழ்ச்சிட்டு



RECEIVED
8 AUG 1969

பள்ளித் தொடக்கப் பாட்டு

கண்கள் விழித்தன; செவிகள் திறந்தன;
　　கருத்துகள் முளைத்தன உள்ளத்திலே!
பண்கள் பிறந்தன; பாக்கள் எழுந்தன;
　　பாய்ந்திடுவோம் கல்வி வெள்ளத்திலே!

இளம்புது நெஞ்சம்; இளம்புது மூளை;
　　இணைந்தன ஒன்றாய்க் கூடத்திலே!
வளம்பெறும் அறிவே வாழ்க்கையின் பூக்கள்!
　　வந்தமர் வீர் கல்வி ஓடத்திலே!

கைகள் புதியன; கால்கள் புதியன,
　　காண்பன முற்றும் விளைநிலங்கள்!
பைகள் முழுதும் புதுப்புது நூல்கள்!
　　பாய்வதால் நிரம்பும் உளக்குளங்கள்!

புத்தம் புதிய சிறுமலர் நெஞ்சம்!
　　புகுவிழா நடத்தும் அறிவுமனை!
தொத்திப் படரும் இளம்பசுங் கொடிகள்!
　　துருதுரு வென்னும் உணர்வுமனை!

பெரியதோர் உலகம்! பெரிதகல் வானம்!
　　பேசிடப் பேசிடப் புதுப்பெருமை!
அரிதாய் முளைத்த மாந்தரின் முளைகள்!
　　அடடா! காண்போம் பெரும்புதுமை!

குரல்: 3.
இசை: 10.

விலை
20 காசு

புகைவண்டி விளையாட்டு !

புகையில்லாமல் கரியில்லாமல்
போகுது வண்டி குப் குப் குப்!
வகைவகை யான வண்டித் தொடர்கள்
வருமாம் பின்னே குப் குப் குப்!

கடைசிப் பெட்டி சின்னப் பெட்டி!
காலில் சிலம்பின் ஒலி கேட்கும்!
அட—அட—முன்னால் இழுபொறி ஒன்று
அந்தப் பிள்ளை மான்கன்று!

குச்சியில் கட்டிய செங்கொடி காட்டக்
குலுங்கி நின்றது தொடர்வண்டி
பச்சைக் கொடியைக் காட்டினான் ஒருவன்!
பாம்பாய் நகர்ந்தது புகைவண்டி!

உரத்த குரலில் ஊதல் செய்தான்
ஓங்கி வளர்ந்த ஒரு பையன்!
மரத்தைச் சுற்றிப் போனது வண்டி;
மணல்வெளி எங்கும் சுற்றிடுமாம்!

இடையில் இடையில் நின்றது வண்டி;
ஏறி இறங்கினர் பல பேர்கள்!
நடைதான்! இரும்புச் சக்கரம் இல்லை!
தண்ட வாளம் நடைபாதை!

கால்கள் வலித்தன; உடல்கள் சோர்ந்தன;
களைத்துப் போனது புகைவண்டி!
வாலைப் போலும் நீண்டிருந்த
வண்டிகள் கழன்றன ஒவ்வொன்றாய்!

வெட்ட வெளியில் மாலைப் பொழுதில்
விளையா டுவமே புகைவண்டி!
கொட்டும் மழையில் கொளுத்தும் வெயிலில்
குப்குப் வண்டி செல்லாதே!

துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-3 | தி. பி. ௨௦௦௦ (விடை) மே, சூன்--69 | இசை-10.

ஊனையும் உயிரையும்,
வளர்ப்பது கல்வியே!

வேனில் கழிந்தது; கார் தொடங் கிற்று!
வீணில் திரிந்த நாட்கள் கழிந்தன!
தொடங்கிற்று பள்ளி! துள்ளிச் சென்றாய்!
முடங்கிய கல்வியை முடுக்கி விட்டாய்!
உன்னுடன் பயின்ற சிறுவரில் ஒருசிலர்
முன்னைய வகுப்பிலே முடங்கியும் இருப்பார்!
பலர் உன் போலவே தேறியும் இருப்பார்!
தேறியோர் யாவரும் திறலோர் அல்லர்;
தோற்றார் யாவரும் அறிவிலார் அல்லர்;
வெற்றியும் தோல்வியும் விளைவைப் பொறுத்தது!
கதையறி வாயா? காணி நிலத்தில்
விதைத்த கை நிறைந்தது! விதையாக்கை வெறுங்கை!
கல்வி நிலத்தின் கதையிலும் முடிவதே!
சொல்வதைக் கேட்டவன் கேட்டதை எழுதினான்;

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

கேளாக் காதன் கேள்வியை விட்டான்.
விடியப் படித்தவன் வெற்றியைப் பெற்றான்;
விடிந்துந் தூங்கியோன் தேர்வினில் விழித்தான்.
போனவை எல்லாம் போகட்டும் தம்பி!
வென்றோர் யாவரும் செருக்கவும் வேண்டா.
தோற்றோர் யாவரும் துவளவும் வேண்டா!
துணிவு கொள்க தோற்றவர் யாவரும்!
இனிவரும் ஆண்டில் என்ன செய்வது?
புத்தம் புதிய பொத்தக வரிசை!
எத்துணை அறிவு! எத்துணை மகிழ்ச்சி!
பொத்தக முழுதும் தேன்துளி எழுத்துகள்!
முத்தெனக் கோத்த கருத்து மாலைகள்!
ஒவ்வொரு வரியும் ஒவ்வோர் அறிவு!
ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு தேன்குடம்!
ஒவ்வொரு நூலும் ஒவ்வோர் அறிஞர்!
எத்தனை அறிஞர் உன் பக்கலில் என்றுபார்!
அடடா! அவர்தரும் அறிவுக் கீடேது!
தொடக்கத் திருந்தே அவர்பின் தொடர்க!
கடக்க லாகாக் கல்விக் கடலைக்
கடப்பதும் எளிது; கற்றலும் எளிதே!
படிக்கப் படிக்கப் படிவதே படிப்பு!
குடிக்கக் குடிக்கத் தேனும் தெவிட்டும்!
ஆனால் கல்வியோ ஆவலைப் பெருக்கும்!
கற்றவர் என்றும் கற்கிலோம் என்பார்;
கல்லாதவரோ கற்றோம் என்பார்;
முற்றக் கற்றவர் எங்கணும் இல்லர்;
கல்லா மூடரோ எங்கணும் இருப்பர்!
கல்விப் பெருமை கழறொணாப் பெருமை!
செல்வப் பெருமை சிதடரும் பெறுவர்.
எனவே தம்பி, இன்றே தொடங்கு!
மனமொரு தும்பி! கல்வியோ மணமலர்!
தேனெனும் அறிவைத் திரட்டுக தம்பி!
ஊனையும் உயிரையும் வளர்ப்பது கல்வியே!

— பெருஞ்சித்திரன்.

கழுதை அழுத கதை

- (துரை மாணிக்கம்) -

"நாட்டில் உயர்ந்தவராய்
நாலுபெயர் பேசுவதும்
பாட்டில் புகழ்வதுவும்,
பட்டாடை போர்த்துவதும்,
கற்படிமம் நாட்டுவதும்
காசுப்ணம் செய்வதுவாம்!
தற்பெருமை பொய்ப்புகழ்ச்சி
மாந்தர் தனியுடைமை!
கான விலங்குகளும்
வானப் பறவைகளும்
மானம் உடையனவால்,
பொய்யை மதிப்பதில்லை!
இக்கால் ஒருவரையிங்கு
ஏற்றமிகப் பேசினரே
அக்கதையைச் சொன்னால்
அருவருப்பே மிஞ்சும்!
பெரியவராம்! மாண்புமிகப்
பெற்றவராம்! மக்கட்கு
உரிய தலைவராம்!
ஊர்வருந்தச் செத்தவராம்!
அத்தனையும் பொய்யே!
அவர்கீழ்மை என்னென்பேன்!
பித்தர் பெருங்குடியர்!
பெண்வெறியர்! பொன்குறியர்!
ஊரவரை ஏமாற்றி
உண்டு கொழுத்தவர்காண்!
பேரை விளம்பரத்தால்
பேச்சால் வளர்த்தவர்காண்!
எத்தித் திருடிபல
ஏழையர்பால் வட்டிபெற்றுச்
சொத்துமேற் சொத்தும்
சுளையாய்ப் பெருந்தொகையும்
வைத்துவிட்டுப் போனவர்தாம்!
வாயடியர்; கையடியர்;

லைத்து வரவுப்
பதுக்கலிலே கைகாரர்!
ஈட்டுக்குப் பெற்றபொருள்
என்றும் திரும்பாது!
பூட்டுக்குப் பொன்திறவு
போட்டுத் திறப்பதனால்
கொள்ளைஎன் றாகாதோ?
மக்களென்றும் கொள்ளையரே!
வெள்ளையெல்லாம் பாலென்பார்!
வேட்டியெல்லாம் நூலென்பார்!
இத்தகைய மக்கள்தாம் –
ஏமாற்றி வாழ்பவர் தாம்;
மெத்த பெருமைகளை
மேன்மேல் பெறுகின்றார்!
விண்ணிலுள்ள மீன்களையும்
விரல்விட்டே எண்ணிடலாம்!
மண்ணில் பணஞ்செய்யும்
மாற்றத்தை எண்ணுவதார்?
அப்பணத்தின் ஆட்சிக்(கு)
அரசரிவர் என்சொல்வேன்"
இப்படிச் சொல்லி
கழுதை எதிரிலுள்ள
காளையினை நோக்கிக்
"கருத்தென்ன?" என்றிடவும்
"பானை பிளந்ததுபோல்
உண்மை பகர்ந்துவிட்டாய்!"
மாலை நெருங்கிற்று;
மற்றுமுங்கள் ஏகாலி
வேலை முடித்திருப்பான்!
வீடுசெல்லல் வேண்டுமன்றோ?"
என்றதனைக் கேட்க,
இரண்டு கழுதைகளும்
ஒன்றன் முகத்தினை மற்
றொன்றுபார்த் தேங்கினவே!
காளையதைக் கண்டவுடன்
"என்ன கழுதையம்மை
'காளையெண்ணி வாழ்கின்றேன்'
என்றே நவின்றாய் நீ!

ஏனிந்தத் தொல்லையெல்லாம் ?
எங்கேனும் ஓடிவிட்டால்
ஊனிழந்தா - போய் விடுவோம் ?
ஒண்டநிழல் காணோமா?
என்னவிடை சொல்கின்றாய் ?
ஏற்கனவே எண்ணிவிட்டேன்.
என்னதுயர் பட்டாலும்
நானினிமேல் வீடுபுகேன்
நீயென்ன கூறுகின்றாய் ?
நேற்றுவரை என்வாழ்க்கை
காயிற் புளியங்காய் !
காட்சியிலே எட்டிக்காய் !"
என்று மிகச்சலித்தே
ஏக்கப் பெருமூச்சாய்
ஒன்று விட்டு நின்றதுகாண் !
உள்ளம் இடிந்துநின்ற
தாய்க்கழுதைக் கிந்தவுரை
தாளம்போல் ஆயிற்று
வாய்க்கவொண்ணாப் பேறுவந்து
வாய்த்ததென எண்ணிற்றே !
ஆகவே காளையிடம்
"அண்ணாவே எங்களுக்கும்
சாகவழி காட்டிடினும்
சாகத் துணிகின்றோம் !
வீடு திரும்புதற்கு
நாங்கள் விரும்பவில்லை !
காடெனினும் உங்களுடன்
கால்கடுக்க வந்திடுவோம் !
இன்னுமிங்கு நின்றிருந்தால்
ஏகாலி வந்திடுவான் !
என்னயினிச் செய்வதென
எங்கட் குரையுங்கள்"
என்றே உரைத்ததது !
இவ்வுரையைக் கேட்டவுடன்,
"நன்றினிமேல் என்பின்
நடவுங்கள்; காட்டிற்கே
சென்று நம் நல்லினத்தோ
டோரினமாய்ச் சேர்ந்திடுவோம்"
என்றபடி காளை
எதிரிலுள்ள பாதையிலே
வெற்றிகொண்ட பேரரசன்
வீறுநடை போட்டதுபோல்
நெற்றி உயர்த்தி
நடந்த(து); அவை பின் நடந்த ! (தொடரும்)

உலகிலேயே . . . !

தொகுப்பு : ‘ கதிரொளி ’, சேரன்மாதேவி

0 அழகிற் சிறந்த நகரம் ‘ பாரிசு ’.

0 பெரும் பணம் படைத்த நகரம் ‘நியூயார்க்’

0 அழகிற் சிறந்த செயற்கைத் துறைமுகம் ‘ரியோடி செனிரோ’

0 மிகக் கடுமையான கோடையில் தங்கும் சிறந்த குளிரிடம் ‘சுவிட்சர்லாந்து’

0 அழகிற் சிறந்த செயற்கைத் துறைமுகம் ‘இட்னி’

0 சிறந்த அறநூல் ‘திருக்குறள்’

0 மிக நீளமான ஆறு ஆப்பிரிக்காவின் வட பகுதியில் பாயும் ‘நைல் ஆறு’ (நீளம் 4145 கற்கள்)

0 பெரிய துறைமுகம் அமெரிக்காவில் உள்ள ‘நியூயார்க்’. பரப்பளவு 764 ச. கற்கள்.

0 மிகச் சிறிய நூல் “உருமர்” என்ற யவன ஆசிரியர் எழுதிய ‘கிறித்துவ மறை நூல்’ தான். இது 1 சதுர விரற்கடை (அங்குலம்) பரப்புடையது. இப்பொழுது இந்நூல் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் (Oxford University) உள்ளது.

0 மிகவும் நீளமான பாலம் அமெரிக்காவில் உள்ள சான்சுபிரான்சுகோ நகரிலுள்ள ‘ துறைமுகப் பாலம் ’. இதன் நீளம் 43560 அடி.

0 மிக நீண்ட தொடர் வண்டி மலைக் குடைவு இந்தியாவிலுள்ள ‘ சிம்பளான் ’. இதன் நீளம் 12 கற்கள், 560 அடி.

0 மிகவும் பெரிய அளவுடையநூல் அரபு நாட்டில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற $5\frac{1}{2}$ அடி நீளமும் 5 அடி அகலமுமுடைய ‘ விவிலிய நூல் (Bible). 2 இலக்கம் பக்கங்களைக் கொண்டது. 2 ஆயிரம் ஆசிரியர்களால் கையாலேயே எழுதப்பட்டது. இது இப்பொழுது ‘ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் ’ உள்ளது.

—— 0 ——

கண்டுபிடித்தவர்கள்

"நனிமுதல்வன்"

O 'நிழற்படக் கருவி'யைத் (கேமிரா) 'தாமசு வெட்சுவுட்டு' (Thomas Wedgewood) என்ற அமெரிக்கர் 1862-ஆம் ஆண்டு கண்டு பிடித்தார்.

O கைக்கடிகாரம் (வாட்ச்) 'பீட்டர் எல்' (Peter Hell) என்ற செருமானியரால் 1500-இல் கண்டு பிடிக்கப்பட்டது.

O தொலைபேசியை (டெலிபோன்) 'அலெக்சாண்டர் கிரகாம் பெல்' என்ற அமெரிக்கநாட்டவர் 1836-இல் உலகிற்கு அறிமுகப் படுத்தினர்.

O தையல் பொறியைப் பிரான்சு நாட்டைச்சேர்ந்த 'திண் மானியர்' 1830-இல் கண்டறிந்தார்.

O தட்டெழுத்துப் பொறி (டைப்ரைட்டர்) 1868-ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த 'சோபாசு' (Sobas) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

O 'கோல்ட்டு' என்ற அமெரிக்கர் 1835-ஆம் ஆண்டில் கைவேட்டெஃகத்தைக் (பிஸ்டல்) கண்டு பிடித்தார்.

—) 0 (—

உங்களுக்குத் தெரியுமா?

சி. தமிழ்வென்றி, திருநெல்வேலி.

1. இங்கிலாந்து வடமுனையினை நோக்கி ஆண்டிற்கு இரண்டு விரற்கடை அளவு நகர்ந்து கொண்டிருக்கிறது. நகர்வதோடு மட்டுமன்றி, கடந்த 15 கோடி ஆண்டுகளில் ஏறத்தாழ 34 பாகை திரும்பியும் இருக்கிறதாம். 117 விரற்கடை அளவு கண்டங்களும் நகர்ந்துகொண்டிருக்கின்றனவாம்,

2, இந்தியாவும் ஆப்பிரிக்காவும் இப்பொழுது நில நடுக்கோட்டின் அண்மையிலுள்ளன. ஆனல் இவை இரண்டும் ஒரு காலத்தில் தென்முனை மண்டலத்தில் இருந்தனவாம்.

3, தென்னப்பிரிக்க ஒன்றியத்தின் தலைநகரங்கள் இரண்டு. செயலகத் தலைநகர் பிரிட்டோரியா. சட்ட மன்றத் தலைநகர் கேப் நகர். இரண்டுக்குமிடையே உள்ள தூரம் ஆயிரம் கற்கள். வடக்கு தெற்கு பிளவு மறையவே இவ்வேற்பாடு.

4. கண்ணுடியைப் பருப்பொருள் என்பது தவறு. அறிவியற்படி கண்ணுடி விறைத்த நீர்மப்பொருள்.

5. பன்னிரண்டு விரற்கடை குறுக்களவுள்ள இசைத்தட்டில் ஊசி சுற்றிவரும் தொலைவு 750 அடிகளாகும்.

6. சிப்பியொன்றில் முத்து விளைந்திட, 15 முதல் 20 ஆண்டுக் காலமாகிறது.

7, ஒரு மின்னற்கீற்றின் ஒளி விண்வெளி முழுதும் பரவிடும். ஒரு நொடியில் ஆயிரத்தில் ஒருபகுதி நேரத்தில் மின்னிய ஒளி, அதைப்போல் முப்பதுமடங்குநேரம் நீடித்திருக்குமாம்.

8. விண்ணில் "செனுன்" என்னும் வளியுள்ளது. இது நம்மைத் தூங்கவைக்கும் ஆற்றலுடையது. ஆயின் அதற்கு மயக்க மருந்தின் தீய ஆற்றலில்லை.

9. பிரான்சு நாட்டில் (பதினேழாம் நூற்றுண்டில்) முதன்முதலாகச் செயற்கை முத்தினைச் செய்தனர். வெள்ளிபோல் பளபளக்கும் ஒருவகை மீனின் செதில்களைப் பொடிசெய்து அத்துடன் தூய வெண்ணிற மெழுகு கலந்து அதனை மெல்லிய கண்ணுடி உருண்டையில் அடைத்துச் செயற்கை முத்தைச் செய்தனர்.

10. ஐசுலாந்திற்கும் அண்டார்டிகாவுக்கு மிடையுள்ள கடற்பரப்பின் அடியில் பத்தாயிரம் கற்கள் நீளமும் ஐந்நூறு கற்கள் அகலமும் உடைய மலைத்தொடர் ஒன்றுள்ளது.

11, அணுக் குண்டின் ஆற்றல் மிகுதியாக இருப்பினும் அஃது அக்குண்டிலுள்ள ஆற்றலில் ஆயிரத்தில் ஒரு பங்கையே பயன் படுத்துகின்றது.

12. செருமனியில் எமல்சுடார்பர் என்ற ஏரி ஒன்று உள்ளது. இதன் நீர் மேற்புறத்தில் இனிப்பாயும், அடிப்பகுதியில் கசப்பாயு முள்ளது.

13. எரிமலைப் பாறையில் படிந்துள்ள உப்பே இந்துப்பு.

14. ஒரு கல்லெடையுள்ள பொன்னை நிலத்தின் மையப் பகுதியில் நிறுத்துப் பார்த்தால் கனமே யிராது.

15. போர்னியா தீவில் ஒருவகை மரமுள்ளது. இதன் வேர்கள் நிலத்திற்கு வெளியில் எண்பது அடி உயரம் வளர்கின்றன. அதன் பின்னரே மரத்தின் தண்டுகள் தோன்றுகின்றன.

—— ჻ ——

பெரியோர் கதை!

பர். கால்டுவெல்

புலவர். திருமேனி- நாகராசன்.

தமிழ்த்தாயின் தவமைந்தர் மிகப்பலர். அவள் தன்னாட்டு மக்களையே அன்றி அயலாரையும் கொண்டு உயர்ந்தவள். எங்கோ பிறந்து எம்மொழியோ கற்று எதனையோ வளர்க்கவந்த அயலாரெல்லாம் அவளின் திறங்கண்டு செயல் மறந்து அவளுக்கே தொண்டர் ஆயினரென்பது வரலாறு. அவருள் அழியாப் புகழுடைய அயல் நாட்டறிஞர்: பர். சி. யு. போப், வீரமாமுனிவர், வின்சுலோ, கால்டுவெல் மற்றும் பிறருமாவர். இனி ஈண்டுக் கால்டுவெல் வரலாற்றை வரன்முறையாக ஒருவாறு காண்போம்.

கால்டுவெல் அயர்லாந்து நாட்டில் கிளாடி என்ற சிற்றூரில் 1814–ஆம் ஆண்டில் பிறந்தார். பிறந்த பத்தாண்டுகள் வரை அவ்வூரிலேயே சிறப்பாகக் கல்வி கற்றார். பின்னர்ப் பெற்றோர், தாய் நாடாகிய இசுகாட்லாண்டு செல்லவே தாமும் சென்று அங்கு ஆங்கில இலக்கியங்களைப் பயின்று தேர்ந்தார். கால்டுவெல்லின் அறிவின் திறம் வியந்த அவர் தந்தை அவரைக் கவின்கலைக் கல்லூரியில் சேர்த்தார். அங்கு அவர் ஓவியக்கலை கற்றுப் பரிசுகள் பல பெற்றார். ஓவியத் தொழிலைத் தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ள அவர் மனம் இசையவில்லை. இறைவனது ஆற்றலையும் பெருமையையும் உணர்த்தும் மெய்யறிவு நூற்களையே அவர்மனம் விரும்பிக் கற்றது. அதன்பயனாக, உலகெங்கும் திருவருளின் பெருமையைப் பரப்பிச் சமயத் தொண்டாற்றுவதே சிறந்ததெனத் தெளிந்தார்

இருபதாம் அகவையில் கால்டுவெல் இலண்டனில் அமைந்த சமயத்தொண்டர் கழகத்திற்சேர்ந்து, கிளாசுகோ பல்கலைக்கழகத்தில் ஐரோப்பியத் தொன்மொழி நூற்களையும், சமய நூற்களையும் சிறப்

புறக்கற்று இளங்கலைத் தேர்வில் முதன்மையாகத் தேறினர். அப் பல்கலைக்கழகத்தில் கிரேக்கமொழிப் பேராசிரியராக இருந்தவர், கால்டு வெல்லுக்குத் தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் தோன்றுவ தற்கு இன்றியமையாத மொழிநூல் முறையை எடுத்துரைத்து அவ ருக்கு ஆர்வத்தை ஊட்டினர். அவர் விதைத்த விதைதான் பிற் காலத்தில் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் செய்ய உதவிற்று என்க.

அக்காலத்தில் தமிழ்நாட்டில் சமயத்தொண்டு செய்ய இலண் டன்மாநகர்த் தொண்டர்கழகம் தக்கார் ஒருவரைத் தேடியது. அது கால்டுவெல்லைத் தேர்ந்தெடுத்தது. அவர் தமக்குக் கிட்டிய வாய்ப்பை எண்ணி மகிழ்ந்தார் நோயுற்றிருந்த அன்னையிடம் அருளுரை பெற் றுக் கப்பல் ஏறினர். அவர் ஏறிய கப்பல் வேறொரு வெள்ளையர் கப்பலால் அழிபட இருந்த நிலையில் இறையருளாலும் தமிழர் முன் செய்த நோற்பாலும் தப்பிப் பிழைத்தது. அவர் அக்கப்பலில் வந்து கொண்டிருந்த பிரௌன் என்பவரிடம் ஆரியம் கற்றார்.

கால்டுவெல் 1838-ம் ஆண்டு சென்னைத் துறைமுகம் வந்திறங் கினர். பின்னரவர் தமிழ்ப்புலமை நிறைந்த ஐரோப்பியத் தொண்டர் களுள் ஒருவரான துருவர் என்பாருடன் மூன்றாண்டு தங்கி இருந்து முறையாகத் தமிழ்பயின்றார். அவர் சென்னையில் சிறந்த சான்றோர் களை நண்பராகப் பெற்றிருந்தார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வின்சுலோ, போப், பவர், ஆத்தர்சன் ஆவர்.

பொருநை நாட்டிற்குக் கிறித்துவமதத் தொண்டு புரிவதற்காக நடந்தே செல்லத் துணிந்தார், கால்டுவெல். சென்னையிலிருந்து வழிநடந்து, தில்லைச் சிற்றம்பலங் கண்டு, மயிலாடுதுறை வழியாகத் தரங்கம்பாடி சென்று. அவ்வூர்ப் பெயர்ப் பொருத்தத்தை வியந்து, குடமூக்கு வழியாகத் தஞ்சைபோந்து கோயிற் சிறப்பறிந்து, காவிரிக் கரையில் அமைந்த திருச்சிராப்பள்ளி கண்டு, திருவரங்கத்தின் மேன்மை அறிந்து. நீலகிரிக்குச் சென்று, அங்கிருந்து கோவை அடைந்து, மதுரையில் நுழைந்து, அதன் சிறப்புக்களைக் கண்டு, போற்றித் திருநெல்வேலி புகுந்து, பொருநையாற்றைக் கடந்து, பாளையங்கோட்டை பார்த்து நாசரேத்து என்னும் நகர் நுழைந்து முதலூர் போகி முடிவில், இடையன்குடி வந்தடைந்தார். அவர் வழிநடைச்செலவு பெரிது. அதனினும் அவர் மனத்திட்பமே மிகப் பெரிது எனலாம்.

அவ்வூரே அவர் சமயத்தொண்டு ஆற்றத் தெரிந்தெடுத்த திருவூர். கால்டுவெல் இடையன்குடிக்குச் செல்லுமுன் அது பாழ்பட்டிருந்தது. அவர் அங்குச் சென்றதும் அது பண்பட்டுச் சிறந்தது. அவர் அங்குப் பாதை திருத்திப் பயன்மரம் நாட்டி நீருற்றுத் தோண்டி நல்லறம் புரிந்தார். பின்னும், செவ்விதின் சிற்றில் நிரை நிரையாகக்கட்டி எழுத்தறிவிக்கப் பள்ளிகளும் பாங்குற அமைத்தார். சிற்பி கைப்பட்ட கல் படிவமாக வடிவெடுத்தாற்போலக் கள்ளியும் முள்ளியும் காய்த்துக் கிடந்த இடையன்குடி கால்டுவெல் கண்பட்டுக் கவினுறு சிற்றூராயிற்று.

கால்டுவெல் தமது இருபத்தொன்பதாம் அகவையில் எலிசா என்ற மங்கையைக் காதலித்துக் கடிமணம் செய்துகொண்டார். அவ்வம்மையார் தம் கணவரின் கருத்துக்கு ஒத்தவர்; அவரின் தொண்டுக்குத் துணைசெய்தவர். பள்ளி வைத்து ஊர் மக்களுக்குக் கல்வி கற்பித்தவர்; பிணியுற்ற மக்களுக்கு மருந்து அளித்து வாழ்வு கொடுத்தவர். அன்றியும், ஏட்டுத்தமிழ் அறிந்த கால்டுவெல்லுக்கு வீட்டுத் தமிழைக் கற்பித்தவரும் எலிசா அம்மையாரே. இதனைக் கால்டுவெல்லே ஒப்புக்கொள்கிறார்.

கால்டுவெல் உயரிய திறன்பல உடையவர் ஆவர். அவர் தலைசிறந்த மொழி பெயர்ப்பாளர்; முதன்மையான புதை பொருள் ஆராய்ச்சியாளர்; மிகச் சிறந்த வரலாற்று ஆசிரியர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தந்நேரில் ஒப்பியல் மொழி ஆய்வாளர்.

அவர் கிறித்தவ சமய வழிபாட்டுநூலை, அறுவர் அடங்கிய குழுவில் இடம்பெற்றுச் சிறப்புறத் தமிழில் பெயர்த்ததோடு, புதிய - பழைய ஏற்பாடுகளைச் செப்பஞ்செய்ய உருவான பன்னிருவர் குழுவிலும் சேர்ந்து பழுதற மொழி பெயர்த்தார். அவ்விரு குழுக்களிலும் அவரது மொழிபெயர்ப்புப் பணியே முதன்மை பெற்றது.

அயல்நாட்டு அறிஞர் எழுதிவைத்த குறிப்புகளால் தமிழகத்தின் பழமை அறிந்த அவர் கொற்கையைத் தோண்டிப்பார்க்கக் கூலி ஆட்களோடு புறப்பட்டுச்சென்றார். அவரைக்கண்ட அவ்வூர் மக்கள்

முன்னோர் புதைத்துவைத்த பொருளை அவர் பறித்துச்செல்ல வந்தாரெனவும், பூதம் காவல்செய்த புதை பொருளை எடுத்துச் சென்றால் அது சினந்து கொற்கை மக்களைக் கொல்லும் எனவும் அஞ்சினர். ஆனால், அவர் அவர்களின் பொருளற்ற அச்சத்தைத் திறமையாகப் போக்கித் தமது புதைபொருள் ஆய்வைத்தொடங்கி வெற்றி கொண்டு தமிழர்களின் பண்டைக்கால மேம்பட்ட நிலையை வெளிப்படுத்தினர்.

மேலும் அவர் பாண்டிய நாட்டின் கல்வெட்டுகள், வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவற்றை நன்காய்ந்து பொருநை நாட்டின் வரலாற்றைத் தொடக்கமுதல் ஆயிரத்து எண்ணூறு ஆண்டு முடிய முறைப்பட எழுதி முடித்தார். அந்நூலை அரசினர் வெளியிட்டு ஆயிரம் உருபா பரிசும் அளித்து அவரைச் சிறப்பித்துள்ளனர்.

அவர் வருகைக்குமுன், ஐரோப்பிய ஆராய்ச்சி அறிஞர்கள் இந்தியாவில் வழங்கும் மொழிகள் யாவும் ஆரிய வகுப்பைச் சேர்ந்தனவாகக் கருதியும், எழுதியும் வந்தனர். ஆனால், கால்டுவெல்லின் மொழியியல் கருத்துக்கள் ஏனைய ஐரோப்பிய ஆய்வாளர் பொருந்தாக் கூற்றுக்களைப் பொடிப்பொடியாக்கின. மொழித்துறையில் பதினைந்து ஆண்டுகள் அரிய பெரிய ஆய்வுகள் செய்து "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற ஒப்புயர்வற்ற ஆய்வுநூல் எழுதித் தமிழை உலகறியச்செய்தார்.

அவர் தமது ஒப்பிலக்கண நூலின் ஆய்வு முன்னுரையில் வெளிப்படுத்திய சில கருத்துகள் வருமாறு: "ஒப்பிலக்கணத்தின் உண்மைகளைத் தெரிந்த எவரும் திராவிட மொழிகளின் இலக்கண அமைதிகளையும், சொற்றொகுதிகளையும் வடமொழிஇலக்கண அமைதிகளோடும் சொற்றொகுதிகளோடும் ஒப்பிட்டுப் பார்த்தவுடன் அவை எக்காரணத்தைக் கொண்டும் ஒன்றற்கொன்று உறவுடையன என்றோ வடமொழியிலிருந்துதான் திராவிடமொழி இலக்கண அமைப்பும் சொல்லாக்கத் திரிபுகளும் தோன்றியிருத்தல் வேண்டும் என்றோ கூற முன்வரமாட்டார் என்பது திண்ணம். வடமொழியிலிருந்து திராவிட மொழிகள் பிறந்திருக்கவேண்டும் என்று கொண்ட பழங்கொள்கை குருட்டுக் கொள்கையே என்பதில் ஐயமில்லை. ... திராவிடமொழிகள் அனைத்தினும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையில் உள்ள தமிழ் மொழியோ வேண்டுமானால் வடசொற்களை அறவே அகற்றித் தனித்

தியங்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதோடன்றி அவற்றின் உதவி இல்லாமல் மிகவும் மேம்பட்டு வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும். தமிழிற் காணப்படும் வடசொற்களின் தொகை, ஆங்கில நூற்களில் கையாளப்பட்டுக் காணப்படும் இலத்தின்மொழிச் சொற்களின் தொகையைவிட மிகுதியானதன்று''

அவர் இடையன்குடியில் சமயத் தொண்டாற்றி வந்தபோது அம்மாவட்டத்தில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது அரசியலார் மக்களை வாழ்விக்கச் செய்த அறப்பணிகள் எல்லாவற்றிலும் தாமும் ஈடுபாடு கொண்டு உழைத்து வற்கடம் ஒழியப் பணி செய்தார்.

கால்டுவெல், காந்தியடிகளைப் போலவே எளிமையாக வாழ்ந்தவர். அவர் எங்கு செல்லினும் நடந்தேசென்ருர் செல்லும் வழியில் கிடைக்கும் காய்கனிகளை உண்டு பசிதீர்ந்தார். கூரைவேய்ந்த இல்லிலேயே தங்கியிருந்தார். இரவில் வீட்டு முற்றத்தில் பனைநார்க்கட்டிலில் படுத்துறங்கினுர்.

இப்படிப் பல்துறைப் பேரறிஞராகவும். குணக்குன்ருகவும் விளங்கிய கால்டுவெல் பெற்ற சிறப்புகள் பலவாம். "திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்ற நூல் எழுதியமைக்காகக் கிளாசுகோ பல்கலைக்கழகம் அவருக்குப் பண்டாரகர் பட்டம் வழங்கியது. அவரது சமயப் புலமையைப் போற்றி இடர்காம் நகரில் அமைந்த பல்கலைக் கழகச் சங்கத்தாரும் பண்டாரகர் தகுதி அளித்தனர்.

அறவாழ்வே, தம் வாழ்வென வாழ்ந்த கால்டுவெல் ஐம்பத்து மூன்ருண்டு அரும்பணிக்குப் பின்னர் ஓய்வுபெற்றுக் கோடைக்கானல் சென்று உறைந்த சில திங்களில் திடுமெனக் குளிர்நோயுற்று ஏழு நாட்களில் இம்மண்ணுலக வாழ்வை நீத்து 1891-ம் ஆண்டு ஆகசுடு 28-ஆம் நாளன்று இறைவன் திருவடி நிழலை எய்தினுர்.

" மன்ன உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே " (புறம்)

— 0 —

தெரிந்துகொள்ளுங்கள்

"தனி முதல்வன்"

0 உலக நிலப்பரப்பில் இந்நாட்டின் பரப்பு 2·4 விழுக்காடு தான்.

0 உலக மக்கள் தொகையில் இந்தியாவின் மக்கள் தொகை 14 விழுக்காடு.

0 இந்தியன் ஒருவனின் சராசரி வாழ்நாள் 50 ஆண்டுகள்.

0 இங்கு தனி மாந்தனுக்குக் கிடைக்கும் உணவின் பங்கு 12·4 விரலிகை (அவுன்சு) எடை தான்.

0 இந்தியாவில் இன்று ஒரு கோடி மக்கள் வேலை கிடைக்காமல் தவிக்கின்றனர்.

0 இந்தியாவில் இன்று 7 கோடி குழந்தைகள் கல்வி கற்கின்றனர்.

0 அதேநேரம் ஆறரைக் கோடிச் சிறுவர்கள் கல்வி வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றனர்.

0 இந்தியாவிலேயே மிக உயரமான அணை 'பாக்ரா' அணை. இதன் உயரம் 740 அடி.

0 இந்தியாவில் 5,73,000 சிற்றூர்கள் உள்ளன. இங்கு இதுவரை 63,000 சிற்றூர்கள்தாம் மின்சார ஏந்து பெற்றுள்ளன.

0 இந்தியாவின் மிக நீளமான ஆறு 'சிந்து'. நீளம் 2900 சீரடிகள் (மீட்டர்).

0 நம் நாட்டு மக்களில் 100-க்கு 70 பேர் பயிர்த்தொழிலிலும், 10 பேர் மற்ற பொருள்கள் செய்வதிலும், 9 பேர் வணிகத்துறையிலும், 2 பேர் போக்குவரவுத் துறையிலும், 12 பேர் அலுவலகப் பணி, ஆசிரியர், மருத்துவர் போன்ற வேலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

0 சித்தரஞ்சனில் உள்ள 'புகைவண்டிப் பொறி' (எஞ்சின்) தொழிற்சாலை ஆண்டுக்கு 200 பொறிகளைச் செய்கின்றது.

பயன் மொழிகள்

தொகுப்பு : மா. தமிழ்ச்செழியன், சேரன்மாதேவி

0 தாம் சொல்வதைக் கேட்பவர்கள் மனங்கொள்ளும்படி எளிதாய்ச் சொல்லி, பிறர் பேசும் பேச்சின் நுண்ணிய பொருளைக் காண்பதே அறிவு.

— திருவள்ளுவர்.

0 செயலை விதையுங்கள்; பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள்; நல்ல பண்பு உருவாகும். பண்பை விதையுங்கள்; உங்கள் எதிர்காலம் உருவாகும்.

— போர்டுமென்.

0 எவன் உலகத்தில் காணப்படும் அறிவையும் அறத்தையும் அணுவளவேனும் பெருக்குகிறானோ அவனே மாந்தனாவான்.

— மைக்கேல் பாரடே.

0 மறைந்த உண்மையை வெளிப்படுத்துவது மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் இயல்பு. வெளிப்பட்ட உண்மையை மறைப்பது கீழ்நாட்டு ஆராய்ச்சியாளர் இயல்பு. —ஞா. தேவநேயப்பாவாணர்

0 உணர்ச்சிகளை அறிந்து செல்பவன் கலைஞன். அவற்றை உணர்ந்து வெல்பவன் அறிஞன். — பெர்னார்டு சா.

0 கல்வி கற்றவரை எளிதில் நல்வழியில் திருப்பலாம், ஆனால் ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம்; ஆனால் அடிமைப்படுத்த முடியாது. — புரேகா.

0 சோம்பேறி யார்? ஒரு வேலையும் செய்யாமல் வீணே கிடப்பவன் மட்டும் அல்லன். இப்பொழுது செய்துகொண்டிருக்கும் செயலை விடச் சிறப்பான முறையில் பணியாற்றுவதற்குத் திறமையும் வாய்ப்பும் இருந்தும் அப்படிச் செய்யாமல் இருக்கிறானே அவனும் சோம்பேறிதான். — சாக்கிரடீசு.

0 தூங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பச் சீரிய தலைவர்களால்தான் முடியும். — நேரு.

0 நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும் உலகத்திற்கும் உண்மையாகவே நடந்துகொள்ளுங்கள். —காந்தியடிகள்

உங்கள் மடல்கள்

தங்களின் தமிழ்ச்சிட்டுக் கண்டேன். மனம் மகிழ்ந்தேன். இன்றைய சிறுவர் உலகிலே பற்பல தாளிகைகள் இருக்கின்றன. ஆனால் அவை தமிழ் மொழியை வளர்க்கும் நிலையில் இல்லையே என நான் வருந்தி, ஏக்கமுற்ற நாட்கள் பலப்பல. அக்குறையைத் தமிழ்ச்சிட்டு நீக்கி, ஏக்கமுற்ற என் நெஞ்சை எக்காளமிட வைத்தது.

— பெ. வெ. சுபாசு, ஈரோடு.

அறிவுக்கு அரிய விருந்து தரும் தமிழ்ச்சிட்டுக்கு என் வாழ்த்து. என் ஆசிரியர் பெருந்தகை திரு. மு. இராமகிருட்டிணன் அவர்களின் அறிவுரையால் நான் " தமிழ்ச்சிட்டு " படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அன்னார்க்கு என் அன்பு கனிந்த நன்றி.

— ச. அய்யாக்கண்ணு, பூமாரி.

பேரன்புமிக்க தமிழய்யா! எங்கள் வணக்கங்கள். தங்களின் " தமிழ்ச்சிட்டை " எங்கள் ஆசிரியரின் வழியாகக் கடந்த ஓராண்டாகப் படித்து வருகின்றோம். சிட்டைப் படிக்கும் போதெல்லாம் தமிழுணர்ச்சி மிக்கு வரப் பெறுகின்றோம்.

— ஏழாம் வகுப்பு மாணவர்கள், ஊ. ஒ. உ. தொ. பள்ளி,
பஞ்சலிங்கம்பாளையம்.

தமிழென்னும் சிட்டு!

தமிழென்னும் சிட்டதனைத்
தனித்தமிழில் கண்டேன்!
அமிழ்தினிக்கும் பாடலினை
அகங்குளிரக் கொண்டேன்!
இமியளவும் பிறமொழிகள்
இதிலில்லை! இல்லை!
தமிழுக்குத் தமிழேதான்
தரமாகும் எல்லை!

— வீரா. விநாயகம், திருவண்ணாமலை.

சமசுகிருதத்தில் தமிழ்ச்சொற்கள் - 6

தமிழ்	சமசு (வ.மொ.)
புரு (குழந்தை)	ப்ருண (bh)
புருவம்	ப்ரு (bh)
புரை (துளை)	புர
பூ (தோன்றல்)	பூ (bh)
பூசு	பூஜ்
பூசை	பூஜா
பூதம் (தோன்றல்)	பூத (bh)
பூதம் (பருத்தல்)	பூத (bh)
பூதி (புழுதி)	பூதி (bh)
பெட்டகம்	பேட்டக
பெட்டி	பேட்டி
பே [அச்சக் குறிப்பு]	பீ (bh)
பேசு	பாஷ் (bh)
பொத்தகம்	புஸ்தக
பொறு	ப்ரு (bh)
மகள்	மஹிலா
மகுடம்	மகுட
மங்கலம்	மங்கல
மசி	மஷி
மண்டலம்	மண்டல
மணி	மணி
மத்தளம்	மர்தல
மத்தளிகன்	மர்தலிக
[மத்தளம் கொட்டுவோன்]	மந்த்த
மத்தம் (மத்து)	மந்த்த
மதங்கம் (சிறிய மத்தளம்)	ம்ருதங்க
மதம்	மத
மதி	மதி
மது	மது

தமிழ்	சமசு (வ.மொ)
மதுரை	மதுரா
மந்திரம்	மந்த்ர
மயில்	மயூர
மரி (இற)	ம்ரு
மருமம் (மார்பு)	மர்மன்
மல்லன்	மல்ல
மல்லிகை	மல்லிகா
மலையம் (பொதிய மலை)	மலய
மனம்	மனஸ்
மன் [மாந்தன்	ம நு
மனை (வீடு)	மான
மா (பெரிய)	மஹா
மாத்திரை (அளவு)	மாத்ரா
மாகாளி	மஹா காலி
மாணவன்	மாணவ
மாதம்	மாஸ், மாஸ
மாதர்	மாத்ரு [தாய்]
மாந்தம்	மாந்த
மாமன்	மாம, மாமக
மாயை	மாயா
மாலை	மாலா
மாவலி [ஓர் அரசன்]	மஹா பலி
மாளிகை	மாலிகா
மானம் (பெருமை)	மான
மானியம்	மான்ய
மிதி	ம்ருத்

தமிழ்	சமசு (வ. மொ)
மீனம்	மீன
முகம்	முக
முகிழம்	முகுல
(அரும்பு)	முகுர
முகுளி [மொட்டு]	முகுலீ
முட்டி	முஷ்டி
முண்டம்	முண்ட
முத்தம் (முத்து)	முக்தா
முத்திரை	முத்ரா (d)
முரசம்	முரஜ
முழுகு	மஜ்
முனி, முனிவன்	முனி
மூசை	மூஷ
[மட்கரு]	
	மூஷி
முட்டை	மூட்ட, முட்ட
மூளை	மஜ்ஜன்
மெது	ம்ருது
மேகலை	மேகலா [kh]
மேழம்	மேஷ
மேழகம் [ஆடு]	மேஷக
வக்கா	பக [baka]
[ஒருவகைக் கொக்கு]	
வங்கு [வளை]	வச், வங்க்
வஞ்சி [ஏமாற்று]	வஞ்ச்
வஞ்சகம்	வஞ்சக
வட்டம்	வ்ருத்த
வட்டணம்	அட்டண
[கேடகம்]	
வட்டிகை [கூடை]	வர்த்திகா

தமிழ்	சமசு (வ.மொ)
வடகம்	வடக
வடம்	வட
[பருத்த கயிறு]	
வடவை	வடபா (b) (b) படவா
வடை	வடா
வர்ணம்	வர்ண
வரணி	வர்ண
வணிகன்	வணிஜ் வணிஜ
வதி[தங்கு]	வஸ்
வயிரம்	வஜ்ர
வரால்	முரல
[ஒரு வகை மீன்]	
வலம்[வலிமை]	பலம்
வள்ளி	வல்லி
வளையம்	வலய
வளம்	வனஸ்
வாடகை	பாடக் (bh; t)
வாரணம்	வாருண, வநண
வாலுகம்	வாலுக.
[மணல்மேடு]	பாலுக [b]
வாளிகை	வாலிகா
[ஒரு வகை காதணி]	
விக்கல்	ஹிக்கா
விட்டம்	விஷ்டா
விடை	வ்ருஷ
[காளை]	வ்ருஷப
விண்டு	விஷ்ணு
[திருமால்]	
வித்து-விதை	வீஜ, பீஜ.

[தொடரும்]

[பாவாணரின் வடமொழி வரலாறு]

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.